ம.அ.2.ந.க.எண்.இ1/0502/2009.
ஆணையாளர் அவர்களின் 27.06.2009 நாளிட்ட குறிப்பு

22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :232/2009 பொருள் எண்.32

தானப்பத்திரம்

மண்டலம்–2, பகுதி–6, வார்டு–25, பிரகாசம் சாலையில் புல எண்.2346/1 முதல் 2346/5 வரை, பிளாக் எண்.21, வ.ஊ.சி. கிராமத்தில் சாலை விஸ்தரிப்புக்கு 20.78ச.மீ. பரப்பளவுள்ள இடத்தை தானக்கிரயப் பத்திரம் மூலம் பெறுவதற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

சட்ட அலுவலர் அவர்கள் மேற்கண்ட இடத்தை மனுதாரரின் சொந்த செலவில் தானக்கிரயப் பத்திரம் மூலம் சென்னை மாநகராட்சி பெறுவதற்கு தேவையான தானக்கிரயப் பத்திரத்தின் நகல்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடைமைத் துறை) அவர்கள் புல எண்.2346/1 முதல் 2346/5 வரையில், பிளாக் எண்.21, வ.ஊ.சி. கிராமத்தில் சாலை விஸ்தரிப்புக்கு 20.78ச.மீ. பரப்பளவுள்ள இடத்தை ஆய்வு செய்து அளவுகள் சரிபார்க்கப்பட்டு, இதற்குண்டான அளவுகள் / எல்லைகள் வரையறுக்கப்பட்டு நிலத்தின் அளவு குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த இடத்தில் தற்சமயம் உள்ள நடைபாதையை அகலப்படுத்துவதற்காக திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்த இடத்தில் எந்தவிதமான ஆக்கிரமிப்புகள் எதுவும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மனுதாரர் மேற்கண்ட இடத்தில் சாலை விரிவாக்கப் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.25,000/–ஐ செலுத்தியுள்ளார்.

எனவே,

1. மண்டலம்–2, பகுதி–6, வார்டு–25, பிரகாசம் சாலையில் புல எண்.2346/1 முதல் 2346/5 வரை, பிளாக் எண்.21, வ.ஊ.சி. கிராமத்தில் சாலை விஸ்தரிப்புக்கு 20.78ச.மீ. பரப்பளவுள்ள இடத்தை தானக்கிரயப் பத்திரம் மூலம் பெறுவதற்கும்;
2. விண்ணப்பதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்ட தோராய அபிவிருத்தி கட்டணம் ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)–க்கு பின்னேற்பு வழங்கவும்;
3. சாலை விரிவாக்கத்திற்கு வழங்கப்பட்ட நிலத்தினை குறியீட்டு, அதிலுள்ள மதில் சுவரை அகற்றிவிட்டு ஆக்கிரமிப்பு ஏதும் இல்லாமல் விண்ணப்பதாரர் ஒப்படைப்பு செய்வதற்கும்;

நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ 15.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண். 4/09, நாள்: 15.7.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.2.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ8/ 5569 / 2005**

**ஆணையாளர் அவர்களின் 18.06.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :233/2009 பொருள் எண்:33

அரசாணை அமலாக்கத்திற்கு அனுமதி வேண்டி

அரசாணை(நிலை) எண்.429, நிதி(ஓய்வூதியம்)த் துறை, நாள்:15.09.2000ல் கூறப்பட்ட சிறப்பு சேமநல நிதிக்கான அரசு மான்ய தொகையினை ரூ.5000/- லிருந்து ரூ.10000/-ஆக உயர்த்தி வழங்கியதை, மன்றத் தீர்மானம் எண்.389/2001 நாள்: 20.07.2001 ன் படி, சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி, சென்னை மாநகராட்சி ஊழியர்கள் ஓய்வு பெறும் பொழுது சிறப்பு சேமநல நிதி பங்குத்தொகை ரூ.10000/- வழங்கப்பட்டு வந்தது. ஆனால் துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை மாநகராட்சி தணிக்கை அவர்களின் கடிதத்தில், அரசு கடித எண்.21069/ நப 3 / 02- 4 / ந.நி.ம.கு.வ.(நப3), நாள் 06.01.03 ன்படி, சிறப்பு சேமநல நிதித் திட்டத்தின் கீழ் வழங்கும் அரசுப் பங்குத் தொகை ரூ.10000/- மாநகராட்சி / நகராட்சி பணியாளர்களுக்கு விரிவுபடுத்தக் கோரிய கோரிக்கையினை அரசு ஏற்க இயலாது என கூறியுள்ளதை சுட்டிகாட்டி தணிக்கை தடை ஏற்படுத்தப்பட்டது.

07.10.2005 அன்று அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு, சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கான சிறப்பு சேமநல நிதிக்காக தனியாக ஒரு வங்கி கணக்கு ஆரம்பிக்கப்பட்டு இக்கணக்கில் மிகையாக உள்ள நிதி தமிழ்நாடு நிதி கழகம் மற்றும் பவர் நிதி கழகத்தாலும் வைப்பு நிதி கணக்கில் வைக்கப்பட்டுள்ளது என்றும், சிறப்பு சேமநல நிதிக்கான செலவுகள் அனைத்தும் இதற்கென பராமரிக்கப்படும் தனியான நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுவதாலும், உயர்த்தப்பட்ட பங்குத் தொகையை மாநகராட்சி பணியாளர்களுக்கு வழங்க உரிய மன்றத் தீர்மானம் பெறப்பட்டுள்ளதாலும் 15.09.2000 முதல் சிறப்பு சேமநல நிதிப் பங்குத் தொகை ரூ.10000/- ஆக உயர்த்தியது சென்னை மாநகராட்சிக்கும் பொருந்தும் என அரசாணை வெளியிட வேண்டி கடிதம் அனுப்பப்பட்டது.

13.08.2007 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.111, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மாந3(2)) துறையில், சிறப்பு சேமநல நிதித் திட்டத்தின் வழங்கப்படும் அரசின் பங்குத் தொகை ரூ.5000/-யிலிருந்து ரூ.10000/-ஆக உயர்த்தி வழங்கிய நடைமுறை, 13.08.2007 முதல் அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது. ஆயினும், 26.11.2007 அன்று அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு, சிறப்பு சேமநல நிதித் திட்டத்தின் கீழ் வழங்கும் பங்குத் தொகையினை ரூ.10000/- ஆக உயர்த்தி 15.09.2000 முதல் நடைமுறைப்படுத்தி வழங்கியமைக்கு ஏற்பளித்து அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டி மீள கடிதம் அனுப்பப்பட்டது.

அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமைச் செயலகம் அவர்களின் 15.05.2009 நாளிட்ட கடிதம் எண்.40200/ மா.ந.3 / 2007-1 ல், அரசாணை (பத்தாண்டு) எண்.340, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 08.08.2008ல் சிறப்பு சேமநல நிதித் திட்டத்தின் கீழ் அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டதுபோல் மாநகராட்சிகள்/நகராட்சிகள் பணியாளர்களுக்கும் அவர்கள் ஓய்வு பெறும்போது சிறப்பு சேமநல சந்தா தொகையுடன் அந்தந்த நிறுவன பங்குத் தொகையாக வழங்கப்படும் சிறப்பு சேமநல நிதியினை ரூ.5000/- லிருந்து ரூ.10000/- ஆக உயர்த்தி 15.09.2000 முன்தேதியிட்டு வழங்க ஆணையிட்டுள்ளது. மேலும், இச்செலவினத்தை மேற்கொள்ள தொடர்புடைய நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களின் சொந்த நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து அதிலிருந்து வழங்கலாமெனவும் இத்திட்டத்தின்கீழ் திரட்டப்பட்ட நிதியிலிருந்து உயர்த்தப்பட்ட தொகை வழங்கப்படுவதால் பொது நிதியிலிருந்து இத்திட்டத்திற்கு நிதி மாறுதல் செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளதாக கூறி அவ்வரசாணையின் நகலையும் இணைத்து சென்னை மாநகராட்சியால் பெறப்பட்டது.

மேலும், சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு அரசு மான்ய தொகை சென்னை மாநகராட்சி நிதியிலிருந்தே வழங்கப்படுவதால் அரசு மான்ய தொகை ரூ.5000/-யிலிருந்து ரூ.10000/-ஆக 15.09.2000 முதல் வழங்கியதில் தவறில்லை.

**ம.க.கு.ந.க.எண்.அ8/ 5569 / 2005**

எனவே, தற்போது வழங்கப்பட்டுள்ள அரசாணை (பத்தாண்டு) எண்.340, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 08.08.2008ஐ சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“16.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.78/2009 நாள்: 16.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.க.கு.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி3/1321/2009**
**ஆணையர் அவர்களின் 23.6.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :234/2009 பொருள் எண் .34

**அரசாணை அமலாக்கத்திற்கு அனுமதி வேண்டி**

அரசாணை எண்.112, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.24.03.2008ல் மத்திய மற்றும் மாநில அரசுப்பணியில் பணியாற்றிக் கொண்டு குடும்ப ஓய்வூதியம் பெற்றுவரும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அவர்கள் பெற்று வரும் அடிப்படை குடும்ப ஓய்வூதியத்துடன் 50 சதவிகித குடும்ப ஓய்வூதிய அகவிலைப்படியுடன் சேர்த்து அரசு அவ்வப்போது வெளியிடப்படும் அரசாணைகளின்படி அதற்குரிய அகவிலைப்படியை மீண்டும் அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை வெளியிடப்பட்ட நாளான 24.3.2008 முதல் அமலாக்கம் செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி அரசாணையினை சென்னை மாநகராட்சி குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.

அரசாணை எண்.49 நிதி (ஓய்வூதியம்) துறை நாள்.11.02.2009ல் மத்திய மற்றும் மாநில அரசுப் பணியில் பணியாற்றிக் கொண்டு குடும்ப ஓய்வூதியம் பெற்றுவரும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் மற்றும் உள்ளாட்சி துறைகளில் பணியாற்றிக் கொண்டு குடும்ப ஓய்வூதியம் பெற்றுவரும் குடும்ப ஓய்வூதியர்களுக்கும் அன்னார் பெற்றுவரும் அடிப்படை குடும்ப ஓய்வூதியத்திற்கு அகவிலைப்படி 18.07.1997 முதல் நீடித்து வழங்கவும் மற்றும் 01.01.2006 முதல் பணியாற்றிக் கொண்டு குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 50% அகவிலை குடும்ப ஓய்வூதியத்துடன் அகவிலைப்படியினை சேர்த்து வழங்கவும் அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

இது சம்மந்தமாக மத்திய, மாநில அரசுப்பணி மற்றும் உள்ளாட்சித் துறைகளில் பணிபுரிந்து கொண்டு சென்னை மாநகராட்சியில் 18.07.1997 முதல் 23.3.2008 வரை குடும்ப ஓய்வூதியம் பெற்றுவரும் குடும்ப ஓய்வூதியர்கள் தோராயமாக 860 நபர்கள் அடிப்படை குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். மேற்படி அரசாணையினை நடைமுறைப்படுத்தி அவர்களுக்கு 18.7.1997 முதல் அகவிலைப்படி மற்றும் 1.1.2006 முதல் 23.3.2008 வரை 50% அகவிலைப்படி குடும்ப ஓய்பூதியத்துடன் சேர்த்து அகவிலைப்படி கணக்கிட்டு வழங்க 18.7.1997 முதல் 23.3.2008 வரை தோராயமாக மொத்த செலவினம் ரு.9.54 கோடி செலவிடப்பட வேண்டும்

எனவே, அரசாணை எண்.49 நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.11.2.2009ஐ சென்னை மாநகராட்சி குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 18.7.1997 முதல் நீட்டித்து வழங்க நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

"16.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.79/2009 நாள்: 16.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி3/8918/2009**
**ஆணையர் அவர்களின் 23.06.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :235/2009 பொருள் எண்.35

**அரசாணை அமலாக்கத்திற்கு அனுமதி வேண்டி**

அரசாணை எண்.113 நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.21.03.2009ல் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி அன்னார் பெற்று வரும் ஓய்வூதியம்/ஓய்வூதிய அகவிலை மற்றும் குடும்ப ஓய்வூதியம் குடும்ப ஓய்வூதிய அகவிலையில் ஏற்கனவே அரசாணை 493 நிதி (ஓய்வூதியம்),துறை, நாள்.13.11.2003ல் அனுமதிக்கப்பட்ட 54 விழுக்காட்டிலிருந்து 64 விழுக்காடு கூடுதலாக அதிகரித்து 01.01.2009 ஆம் நாள் முதற்கொண்டு வழங்க அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட அரசாணையில் ஒட்டு மொத்த தொகை பெற்ற ஓய்வூதியத்தை தொகுத்து பெறும் தொகையில் மூன்றில் ஒரு பங்கு தொகையைத் திரும்பப்பெறும் தகுதியுள்ள/ திருத்தியமைக்கப்பட்ட வீதத்தில் திரும்பப் பெறும் தொகை பெற தகுதியுள்ள மாநில அரசுப் பணியாளர்களின் முழு ஓய்வூதியத் தொகைக்கு முழு ஓய்வூதியம் மற்றும் அகவிலை ஓய்வூதியத்தில் 64 விழுக்காடு அகவிலைப்படி 01.01.2009 முதல் பெற தகுதிடையவராவர் என்றும் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி ஜனவரி மற்றும் பிப்ரவரி 2009 ஆம் மாதங்களுக்கு அகவிலைப்படி நிலுவைத் தொகை மார்ச்–2009 ஆம் மாதம் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெற்ற பின்னரே ரொக்கமாக வழங்கப்பட வேண்டும் என்றும், மேற்படி அரசாணை அரசு ஓய்வூதியதாரர்கள் அரசு உதவி பெறும் மற்றும் உள்ளாட்சி மன்ற கல்வி நிறுவனங்களின் ஓய்வூதியம் பெறும் ஆசியர்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் ஏனைய ஓய்வூதியதாரர்களுக்கு பொருந்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்மந்தமாக சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் 01.01.2009 அன்று மொத்தம் 14,926 நபர்கள் உள்ளனர். இவ்வரசாணையை நடைமுறைப்படுத்தி திருத்தப்பட்ட அகவிலைப்படி வழங்க ஒரு மாதத்திற்கு ரூ.42.85 இலட்சம் செலவாகும். ஜனவரி 2009 முதல் மார்ச் 2009 வரை மூன்று மாதங்களுக்கு 1.296 கோடி செலவு ஆகும். நடப்பு நிதியாண்டிற்கு (2009–2010) ஏப்ரல் 2009 முதல் மார்ச் 2010 வரை ரூ.5.3 கோடி செலவிடப்பட வேண்டும். மேற்கண்ட அரசாணையினை மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு ஆணையரின் அனுமதி பெற்று இவ்வலுவலக சுற்றறிக்கை பொ.து.ந.க.எண்.பி3/8918/2009, நாள்.06.04.2009 மூலம் அமலாக்கம் செய்யப்பட்டது.

அரசாணை எண்.113 நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.21.03.2009ன் படி உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 54 விழுக்காட்டிலிருந்து 64 விழுக்காடாக ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படி குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய அகவிலைப்படி சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்கியமைக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “16.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.80/2009 நாள்: 16.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.அ1/5801/2009**
**ஆணையர் அவர்களின் 26.06.2009 நாளிட்டகுறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :236/2009 பொருள் எண்.36

**+2 படிக்கும் மாணவ/மாணவியர்களை ஊக்குவிக்கும்பொருட்டு தரவரிசை அடிப்படையில் தேர்வு செய்து கல்வி உதவித் தொகை வழங்குவது சம்மந்தமாக.**

சென்னை மாநகராட்சி. 27 மேல்நிலைப் பள்ளிகளில் +2 படிக்கும் மாணவ/மாணவியர்கள் பெறும் மதிப்பெண்களின் தரவரிசை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு உதவித் தொகை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. சென்னை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் +2 படித்து. மருத்துவம். பொறியியல் துறையில் சேரும் முதல் 25 மாணவ/மாணவியர்களுக்கு அதிக பட்சமாக ரூ.25,000/– மட்டும் 4/5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். | = ரூ.25,000 x 25 = 6,25,000/– |
| 2.ஆசிரியர்/ செவிலியர் இரண்டு/ மூன்றாண்டு பயிற்சியில் சேர்ந்து படிக்கும் முதல் 25 மாணவ/மாணவியர்களுக்கு அதிகப்பட்சமாக ரூ.5,000/– ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் | = ரூ.5.000 x 25 = 1,25,000/- |
| 3. பி.எஸ்.சி, பி.சி.எ, பி.காம், பி.பி.ஏ. அல்லது மூன்று ஆண்டு பட்டப்படிப்பில் சேர்ந்து படிக்கும் முதல் 50 மாணவ / மாணவியர்களுக்கு உதவித் தொகை அதிகபட்சமாக ரூ.3000/–ம் மட்டும் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும். | = ரூ.3,000 x 50 = 1,50,000/- |
| | மொத்தம் ரூ. = 9,00,000/– |

கல்வி உதவி தொகை வழங்க நிபந்தனைகள்

1. மருத்துவ/ பொறியியல் துறையில் சேரும் மாணவ/ மாணவியர்கள் அண்ணா பல்கலை கழக கலந்தாய்வு குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்டவருக்கும் மற்றும் இயக்குநர் மருத்துவ துறை கீழ்ப்பாக்கம் அல்லது தனியார் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும்.
2. அரசு கல்லூரி/ அரசு உதவி பெறும் கல்லூரி மற்றும் தனியார் கல்லூரிகளில் முழு நேர கல்வியில் சேர்ந்து படிப்பவர்களுக்கு மட்டுமே கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

<u>மாணவர்களை தேர்வு செய்யும் முறை</u>

1. 27 மேல்நிலைப்பள்ளிகளிலிருந்து +2 வகுப்பில் தேர்ச்சி பெறும் மாணவர்களில் மதிப்பெண்களின் தரவரிசை அடிப்படையில் மாணவ/மாணவியர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். தொழிற் படிப்பிற்கான (B.E)ல் சேருவதற்கு கணக்கு/ இயற்பியல்/வேதியியல் பாடங்களில் பெறும் மதிப்பெண்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். மருத்துவ படிப்பில் சேருவதற்கு. உயிரியல்/ இயற்பியல்/ வேதியியல்/ தாவரவியல்/ விலங்கியல் ஆகியவற்றில் பெறும் மதிப்பெண்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். குறிப்பிட்ட பாடங்களில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் 25 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**க.து.ந.க.எண்.அ1/5801/2009**

2. ஆசிரியர்/செவிலியர் மற்றும் இதர பட்டப் படிப்புகளுக்கு +2 வகுப்பில் அனைத்துப் பாடங்களிலும் பெறும் மதிப்பெண் அடிப்படையில் 75 மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெற தகுதியுடையவர்களாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

உதவித் தொகை பெறுவதற்கான காலம்

கல்வி உதவித் தொகை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும். உதவித் தொகை பெறுபவர்கள் அவர்கள் சேர்ந்துள்ள படிப்பை முழுமையாக பூர்த்தி செய்ய வேண்டும். ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் 3 பாடங்களுக்கு மேல் தேர்ச்சி பெறாவிட்டால், வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை வரும் கல்வியாண்டிலிருந்து நிறுத்தப்படும்.

இத்திட்டம் செயல்படுத்த மொத்த செலவினம் இக்கல்வியாண்டிற்கு ரூ.9 இலட்சம் செலவாகும். இத்தொகையினை கணக்கு குறியீட்டு எண் 803ல் முன் பணமாக பெற்று இச்செலவினத்தை ஒவ்வொரு ஆண்டும் மாநகராட்சி வருவாய் வரவு செலவு திட்டம், 23 உயர்நிலைக்கல்வி என்ற தலைப்பில், இயக்க செலவின திட்டம், கணக்கு குறியீடு எண்.184கல்வி, தர மேம்பாடு என்ற கணக்கில் மேற்கொள்ளப்படும்.

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் +2 வகுப்பில் தேர்ச்சி பெறும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், தொடர்ந்து மேற்படிப்பைத் தொடர மேற்கண்ட வழிமுறைகளின் படி கல்வி உதவித் தொகை வழங்க நடப்பு நிதியாண்டு 2009–2010 நிலைக்குழுக்கள் கல்வி, வரிவிதிப்பு மற்றும் நதி மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

09.07.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.23/2009 நாள் 09.07.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“16.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.83/2009 நாள்: 16.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

‘‘மன்ற உறுப்பினர்களின் கருத்துக்களின் அடிப்படையில் இந்த ஆண்டு முதல் சட்ட கல்வி பயிலும் முதல் 25 மாணவ/ மாணவியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.5000/– வழங்கலாம் என்ற திருத்தத்துடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’.

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம) ம.கு.ந.க.எண் எப் 17/ 1532/09**

**ஆணையர் அவர்களின் 03.07.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :237/2009 பொருள் எண்: 37

**மாவட்ட குடும்ப நலத்துறை, 10 மண்டலங்களின் கீழ் இயங்கும் 24 மணி நேர மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு பரிசுப்பை நடப்பு ஆண்டிற்கும் (2009–10), மேலும் வரும் ஆண்டுகளிலும் பிறக்கும் குழந்தைகளுக்கும் பரிசுப்பைகளை கொள்முதல் செய்ய அனுமதி மற்றும் 2008–09ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும் வேண்டி.**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2008 – 09 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் கூறியபடி மாவட்ட குடும்ப நலத்துறையின் 10 மண்டலங்களின் கீழ் இயங்கும் 24 மணி நேர மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் பரிசுப்பைகள் (பருத்தியினாலான புத்தாடை, டவல் , மற்றும் மாநகராட்சி பெயர் பொறித்த பிளாஸ்டிக் பை ஜான்சன் சோப் (50 கிராம்) மற்றும் ஜான்சன் பவுடர் (50 கிராம்) பொருட்கள் அடங்கிய பை) ஆணையரின் ஆணைப்படி செப்டம்பர் 2008 முதல் வழங்கப்பட்டு வருகிறது. 2008–09 ஆண்டில் பிறந்த குழந்தைகளுக்காக 13,900 எண்ணிக்கை பரிசுப்பைகள் (பருத்தியினாலான புத்தாடை, டவல், பிளாஸ்டிக் பை) தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு சங்கத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டும், ஜான்சன் சோப் (50 கிராம்) மற்றும் ஜான்சன் பவுடரும் (50 கிராம்) ஒவ்வொன்றும் 14,000 எண்ணிக்கை, குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திடமிருந்தும், கொள்முதல் செய்யப்பட்டது. மாநகராட்சியில் மருத்துவமனைகளில் செப்டம்பர் 2008 முதல் பிறந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது .

இவ்வகையில் வழங்கப்படும் பரிசுப்பையானது பிரசவித்த தாய்மார்களின் மனதில் மாநகராட்சி மருத்துவமனையுடன் ஒரு பாசப்பிணைப்பினை ஏற்படுத்தியுள்ளது. தரம் உயர்த்தப்பட்ட சேவைகளினாலும் , புத்தாடை, சோப், பவுடர்கள் போன்ற பரிசுகளினாலும் மாநகராட்சி மருத்துவமனைகளின் பேரில் நன்மதிப்பும், நம்பிக்கையும் வளர்ந்துள்ளது. இவ்வகையில் அதிகரித்துள்ள பிரசவங்களை கணக்கிட்டு 2009 –2010 ஆம் ஆண்டிற்கு 15.000 எண்ணிக்கை பரிசுப்பைகளை கொள்முதல் செய்து வழங்க கோரப்படுகிறது.

| எண் | விபரம். | **ஒன்றின் விலை (தோராயமாக) (வரிகள் தனியாக)** | **பொருட்களின் எண்ணிக்கை** | **மொத்த தொகை** |
|---|---|---|---|---|
| 1 | பரிசுப்பை துணி வகைகள்(பருத்தியினாலான புத்தாடை, மற்றும் டவல், மாநகராட்சியின் பெயர் பொறித்த பிளாஸ்டிக் பை) | **ரூ 156 /.–** | **15,000** | **23,40,000** |
| 2 | ஜான்சன் சோப் (50 கிராம்) | **ரூ 18 / –** | **15,000** | **2,70,000** |
| 3 | ஜான்சன் பவுடர் (50 கிராம்) | **ரூ 20 / –** | **15,000** | **3,00,000** |
| | **மொத்தம்** | | | **29,10,000** |

மேற்கண்ட விபரப்படி 15,000 எண்ணிக்கை பரிசுப்பைகளை கொள்முதல் செய்ய தோராயமாக ரூ 29,10,000/–(வரிகள் தனியாக) செலவாகிறது. இந்த பரிசுப்பைகளில் துணி வகைகளை தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு சங்கத்திடமிருந்து நேரடியாக 15.000 எண்ணிக்கை பரிசுப்பைகளை (பருத்தியினாலான புத்தாடை, டவல் , மாநகராட்சியின் பெயர் பொறித்த பிளாஸ்டிக் பைகளை) கொள்முதல் செய்யவேண்டியுள்ளது. 15,000 எண்ணிக்கை ஜான்சன் சோப் (50 கிராம்) மற்றும் 15,000 எண்ணிக்கை ஜான்சன் பவுடர்களை (50 கிராம்) தரத்தினை உறுதி செய்து குழந்தைகளுக்கு தரத்துடன் அளிக்கும் நோக்குடன் குறிப்பிட்டகாலங்களில் தேவைப்படும் எண்ணிக்கையை விலைப்புள்ளிகள் கோரி குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்திடமிருந்தும் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. இதற்காகும் செலவினை கணக்கு எண் 168, கணக்கு பிரிவு 057 ல் செலவு செய்யலாம். மேலும் இனி வரும் ஆண்டுகளிலும் மாநகராட்சியின் மருத்துவ மனைகளின் உயரிய, பாதுகாப்பான சேவைகளின் மூலம் அதிகரிக்கப்படும் பிரசவங்களுக்குத் தகுந்தாற்போல் தேவைப்படும் எண்ணிக்கையில் பரிசுப்பைகளை கொள்முதல் செய்து வழங்க, தேவைப்படும் நிதியினை கணக்கு எண் 168, கணக்கு பிரிவு 057ல் ஒதுக்கி, பரிசுப்பைகளை தொடர்ந்து கொள்முதல் செய்து வழங்க கோரப்படுகிறது.

**மா.கு.ந(ம) ம.கு.ந.க.எண் எப் 17/ 1532/09**

எனவே மாவட்ட குடும்ப நலத்துறையின் 10 மண்டலங்களின் கீழ் இயங்கும் 10 எண்ணிக்கை 24 மணி நேர பிரசவ மருத்துவமனைகளில் 2009 –10 ஆம் ஆண்டில் பிரசவிக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்க தேவைப்படும் 15,000 எண்ணிக்கை பரிசுப்பைகளை கொள்முதல் செய்ய தோராயமாக ரூ 29,10,000/– செலவாகிறது. இந்த பரிசுப்பைகளில், துணி வகைகளை தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு சங்கத்திடமிருந்து நேரடியாக 15.000 எண்ணிக்கையை (பருத்தியினாலான புத்தாடை, டவல், மாநகராட்சியின் பெயர் பொறித்த பிளாஸ்டிக் பைகளை ) கொள்முதல் செய்யவும், 15,000 எண்ணிக்கை ஜான்சன் சோப் (50 கிராம்) மற்றும் 15,000 எண்ணிக்கை ஜான்சன் பவுடர்களை (50 கிராம்) தரத்தினை உறுதி செய்து குழந்தைகளுக்கு தரத்துடன் அளிக்கும் நோக்குடன், குறிப்பிட்ட காலங்களில் தேவைப்படும் எண்ணிக்கையை விலைப்புள்ளிகள் கோரி குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், மேலும் இனி வரும் ஆண்டுகளிலும், மாநகர மக்களின் நலன் கருதி , மாநகராட்சியின் மருத்துவ மனைகளின் உயரிய பாதுகாப்பான சேவைகளின் மூலம் அதிகரிக்கப்படும் பிரசவங்களுக்குத் தகுந்தாற்போல் பிறக்கும் குழந்தைகளுக்கு, தேவைப்படும் எண்ணிக்கையில் பரிசுப்பைகளை கொள்முதல் செய்ய, தேவைப்படும் நிதியினை கணக்கு எண் 168, கணக்கு பிரிவு 057ல் ஒதுக்கி , பரிசுப்பைகளை கொள்முதல் செய்து வழங்க அனுமதியும், மற்றும் 2008–09 ஆம், ஆண்டில் பெறப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும் நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"09.07.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.14/2009, நாள் 9.07.2009-ன்படி 2008–2009 ஆம் ஆண்டில் பரிசுப்பைகள் வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும், 2009–2010 ஆம் ஆண்டிற்கும் மற்றும் இனிவரும் காலங்களில் பரிசுப்பைகள் கொள்முதல் செய்து வழங்க நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"16.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.84/2009 நாள்: 16.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம) ம.கு.ந.க.எண் எப் 17 / 1835 / 09**
**ஆணையர் அவர்களின் 30.06.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :238/2009 பொருள் எண்: 38

**மாவட்ட குடுமப நலத்துறை – சுகப் பிரசவம்(ம) அறுவை சிகிச்சை பிரசவம் பார்க்க உதவும் ஒருமுறை மட்டுமே பயன் படுத்தப்படும் பாதுகாப்பு சாதனங்கள் (Disposable Delivery kits) கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது. – 2009 –2010 ஆண்டிற்கும் மற்றும் இனி வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பாதுகாப்பு சாதனங்களை கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கி, கொள்முதல் செய்து வழங்க அனுமதியும் 2008–09ஆம் ஆண்டு வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும் வேண்டி**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2008–09 ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் படி , மாவட்ட குடும்ப நலத்துறையின் கீழ் இயங்கும் 10 எண்ணிக்கை 24 மணிநேர மகப்பேறு மருத்துவ மனைகளிலும் நடைபெறும் பிரசவங்களை கையாள ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிரசவ பாதுகாப்பு சாதனங்கள் (Disposable Delivery kits) கொள்முதல் செய்து உபயோகபடுத்தப்பட்டு வருகிறது. ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிரசவ பாதுகாப்பு சாதனங்களினால் பிரசவிக்கும் தாய்மார்கள், குழந்தைகள் மற்றும் செவிலியர்களின் நலனும், நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பும் அளிக்கமுடிகிறது. முக்கியமாக எய்ட்ஸ் (ம) மஞ்சள் காமாலை (B) போன்ற தற்காலங்களில் எளிதில் தொற்றக்கூடிய நோய்களிலிருந்தும் பாதுகாப்பளிக்கிறது. முதற்கட்டமாக முதல் 6 மாதங்களுக்கு ( சாதாரண பிரசவத்திற்கு 5000 எண்ணிக்கை (ம) அறுவை சிகிச்சை பிரசவத்திற்கு 2000 எண்ணிக்கை) மொத்தமாக 7000 எண்ணிக்கை ஒரு முறை மட்டுமே பயன் படுத்தப்படும் பிரசவ பாதுகாப்பு சாதனங்கள் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, ரூ 17,95,000/– செலவு செய்து கொள்முதல் செய்யப்பட்டு, மருத்துவமனைகளில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிரசவ பாதுகாப்பு சாதனங்கள் பல தனியார் மருத்துவமனைகளில் கூட பயன்படுத்தப்படுவதில்லை. இந்த பாதுகாப்பு சாதனங்களின் பயன்பாட்டால் மாநகராட்சி மருத்துவமனைகள் முழுமையான நோய் தொற்றிலிருந்து மாநகர மக்களை பாதுகாத்து சேவை அளித்து வருகிறது. இதைப்போன்ற மாநகராட்சி வழங்கும் பல சேவைகளினால் மருத்துவமனைகளின் பிரசவங்களின் எண்ணிக்கை மற்றும் தரம் அதிகரித் துள்ளது. எனவே இந்த பாதுகாப்பு சாதனங்களை தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் பயன்படுத்தி மாநகராட்சியின் முழுமையான நோய் பாதுகாப்பு பணியினை தொடர கோரப்படுகிறது.

மாநகராட்சி மருத்துவமனைகளில் பிரசவங்கள் அதிகரித்துள்ளதை கணக்கிட்டு 2009 –10 ஆம் ஆண்டிற்கு 15,000 எண்ணிக்கை ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிரசவ பாதுகாப்பு சாதனங்கள் கொள்முதல் செய்து வழங்க கோரப்படுகிறது.

| t. v© | égu«. | X‹¿‹ éiy (njhuhakhf) | bghU£fë‹ v©â¡if | bkh¤j bjhif %ghŒ. |
|---|---|---|---|---|
| 1 | xU Kiw k£Lnk ga‹gL¤j¥gL« Ãurt ghJfh¥ò rhjd§fŸ **(DISPOSABLE NORMAL DELIVERY KITS)** | ரூ **225** /.- | 10,000 | 22,50,000 /- |
| 2 | xU Kiw k£Lnk ga‹gL¤j¥gL« mWit Á»¢ir Ãurt ghJfh¥ò rhjd§fŸ **(DISPOSABLE CAESAREAN DELIVERY KITS)** | ரூ **335** / – | 5,000 | 16,75,000 /- |
| | bkh¤j« | | | 39,25,000 |

<u>மா.கு.ந(ம) ம.கு.ந.க.எண் எப் 17 / 1835 / 09</u>

மேற்கண்ட விபரப்படி ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிரசவ பாதுகாப்பு சாதனங்கள் (10,000 எண்ணிக்கை சாதாரண பிரசவத்திறகானது மற்றும் 5,000 எண்ணிக்கை அறுவை சிகிச்சை பிரசவத்திற்கானது) மொத்தமாக திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி கொள்முதல் செய்ய தோராயமாக ரூ 39,25,000/– செலவாகிறது. இதற்காகும் செலவினை கணக்கு எண் 168, கணக்கு பிரிவு 057ல் செலவு செய்யலாம். மேலும் இனி வரும் ஆண்டுகளிலும் மாநகராட்சியின் மருத்துவ மனைகளின் உயரிய பாதுகாப்பான சேவைகளின் மூலம் அதிகரிக்கப்படும் பிரசவங்களுக்குத் தகுந்தாற்போல் தேவைப்படும் எண்ணிக்கையில் ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிரசவ பாதுகாப்பு சாதனங்களுக்கு, தேவைப்படும் நிதியினை, கணக்கு எண் 168, கணக்கு பிரிவு 057 ல் ஒதுக்கி , தடையின்றி தொடர்ந்து கொள்முதல் செய்து வழங்க கோரப்படுகிறது.

எனவே, மாவட்ட குடும்ப நலத்துறையின் 10 மண்டலங்களின் கீழ் இயங்கும் 10 எண்ணிக்கை 24 மணிநேர மருத்துவமனைகளுக்கும் 2009 –10 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும், 15,000 எண்ணிக்கை ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிரசவ பாதுகாப்பு சாதனங்களை (10,000 எண்ணிக்கை சாதாரண பிரசவத்திறகானது மற்றும் 5,000 எண்ணிக்கை அறுவை சிகிச்சை பிரசவத்திற்கானது) , திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, தோராயமாக ரூ. 39,25,000/– (முப்பத்தொன்பது இலட்சத்து இருப்பத்தைந்தாயிரம் மட்டும்) செலவு செய்து கொள்முதல் செய்யவும், மற்றும் இனி வரும் ஆண்டுகளிலும், மாநகர மக்களின் நலன் கருதி, மாநகராட்சியின் மருத்துவ மனைகளின் உயரிய பாதுகாப்பான சேவைகளின் மூலம் அதிகரிக்கப்படும் பிரசவங்களுக்குத் தகுந்தாற்போல் தேவைப்படும் எண்ணிக்கையில் ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிரசவ பாதுகாப்பு சாதனங்களை, கொள்முதல் செய்ய தேவைப்படும் நிதியினை கணக்கு எண் 168, கணக்கு பிரிவு 057 ல் ஒதுக்கி , தடையின்றி வரும் ஆண்டுகளிலும் கொள்முதல் செய்து வழங்கவும் மற்றும் 2008–09 ஆம், ஆண்டில் பெறப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி வழங்கவும் நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"09.07.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு ( பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 17 /2009, நாள் 9.07.2009–ன்படி 2008–2009 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பிரசவ பாதுகாப்பு சாதனங்களுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும், 2009–2010 ஆம் ஆண்டிற்கும் மற்றும் இனிவரும் ஆண்டுகளிலும் பிரசவ பாதுகாப்பு சாதனங்களை கொள்முதல் செய்து வழங்கத் தேவையான நிதி ஒதுக்கீட்டிற்கும் நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"16.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.85/2009 நாள்: 16.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>வ.து.ந.க.எண்.ஜி1/6481/2008</u>**

**<u>30.6.2009 நாளிட்ட ஆணையரின் குறிப்பு</u>**

**<u>22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :239/2009 பொருள் எண்.39

**<u>தனியார் கல்வி நிறுவனங்களுக்கான சொத்துகளுக்கு சொத்துவரி விதிப்பது தொடர்பாக</u>**

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.101 (சி) ன்படி, கல்வி நிறுவனங்களுக்கு சொத்து வரி விதிக்க வழிவகை இல்லை. இதனால், சென்னை மாநகரில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களுக்கு சொத்துவரி விதிப்பது குறித்து முடிவெடுக்க மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், எண்.535/08, நாள்.30.9.2008ல்

“தனியார் மற்றும் அனைத்து பள்ளிகளையும் பட்டியலிட்டு அனைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விவாதித்து தீர்மானிக்கலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது”.

இதனைத் தொடர்ந்து சென்னை மாநகரில் உள்ள கல்வி நிறுவனங்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டது. அதன் விவரச்சுருக்கம் பின்வருமாறு.

| | |
|---|---|
| அரசு நிதியுதவி பெறாத தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை | 732 |
| அரசு நிதியுதவி பெறும் தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை | 119 |

எனவே, சென்னை மாநகரில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிக்க ஏதுவாக சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919ல் பிரிவு எண்.101 (சி)ன்படி தக்க சட்டத் திருத்தினை மேற்கொள்ள அரசினைக் கோர மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“16.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.82/2009 நாள்: 16.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:வ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பே.சா.து.ந.க.எண்.பி4/1261/2009**
**ஆணையரின் 10–07–09 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :240/2009 பொருள் எண். 40

**வியாசர்பாடி ஜி.என்.டி. சாலையில் நெடுஞ்சாலைத்துறையினரால் கட்டப்படவுள்ள மேம்பாலத்தின் ஒரு கரத்தினை சென்னை மாநகராட்சி சாலையான சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலையில் அமைப்பதற்கும் மற்றும் சென்னை மாநகராட்சி சாலைகளான எம்..கே.பி, நகர் மேற்குப் பக்க நிழற்சாலை மற்றும் சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலைகளை உபயோகித்துக் கொள்வதற்கும் .இசைவளித்தல்**

நெடுஞ்சாலைத் துறை (திட்டங்கள்) மூலம் வியாசர்பாடி ஜி.என்.டி. சாலையில் கி.மீ. 4/3-ல் உள்ள வாகன சுரங்கப்பாதைக்கு பதிலாக புதிய மேம்பாலம் அமைக்க 14.11.2005-ல் நாளிட்ட அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கென நியமிக்கப்பட்ட கலந்தறிதற்குரியவர்கள் அளித்த திட்ட அறிக்கைகளை ஆராய்ந்து முடிவெடுக்க 9.11.06 நாளிட்ட அரசு ஆணை மூலம் ஒரு வழிகாட்டும் குழு அமைக்கப்பட்டது. (Steering Committee) அதில் சென்னை மாநகராட்சி ஆணையரும் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முதல் கட்டமாக கலந்தறிதற்குரியவர்கள் அளித்த திட்ட அறிக்கையில் எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் (NH5) ஒரு புதிய நான்கு வழி மேம்பாலம், 1க்கு 30 சாய்வில் (Gradient) 7.5 மீட்டர் அகலத்திற்கு சர்வீஸ் சாலைகளும், 2 மீட்டர் அகலத்திற்கு மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதை அமைத்து மேல்புறம் கொல்கத்தா அணுகு சாலையையும் நான்கு வழி சாலையாக மேம்படுத்த 5.07.07 அன்று நடைபெற்ற வழிகாட்டும் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. அதற்கென அரசின் நிர்வாக ஒப்புதல் ரூ.80.68 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்திற்கு தேவையான நிலங்களை ஆய்வு செய்தபோது மொத்தம் 1,92,351 சதுர அடி (4.412 acres) நிலம் தேவையென கணக்கிடப்பட்டது. இத்திட்டத்திற்கு அதிக அளவில் நிலம் தேவைப்படுவதாலும், அதிக எண்ணிக்கையில் தற்சமயம் உள்ள கட்டிடங்கள் இடிக்க வேண்டியுள்ளதாலும், பொது மக்களிடமிருந்தும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடமிருந்தும் இத்திட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டி அரசுக்கு அதிக எண்ணிக்கையில் கோரிக்கைகள் அனுப்பப்பட்டது.

கலந்தறிதற்குரியவர்கள் மறு ஆய்வு செய்தததில் எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் (NH5) கொல்கத்தா பக்கம் தோராயமாக 10 மீட்டர் அகலமே உள்ளதால் (23 மீட்டர் தேவை) நான்கு வழி மேம்பாலம் நேராக கட்டுவதால் அதிக நில எடுப்பு தேவைப்படுகிறது என கணக்கிடப்பட்டது. மேற்கண்ட வேண்டுகோளுக்கிணங்க இத்திட்டத்தை மறு ஆய்வு செய்ததில் எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் சென்னை பக்கம் நான்கு வழி சாலையாக மேம்பாலம் தொடங்கி கொல்கத்தா பக்கம் மேம்பாலத்தை இரு கரங்களாக பிரித்து இரண்டு வழி சாலைகளாக அமைப்பதால் நில எடுப்பு அதிகம் குறைய வாய்ப்புள்ளது என குறிப்பிடப்பட்டது. மேம்பாலத்தின் ஒரு கரம் கொல்கத்தா பக்கம் எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையிலும் வார்டு-32 (தேசிய நெடுஞ்சாலை வசம் உள்ளது.) மற்றும் ஒரு கரத்தை வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகர் நெடுஞ்சாலையிலும் வார்டு-32 (சென்னை மாநகராட்சி வசம் உள்ளது) அமைப்பது என முடிவெடுத்து அதற்கென நியமிக்கப்பட்ட வழிகாட்டும் குழுவின் ஒப்புதல் நெடுஞ்சாலை துறையால் பெறப்பட்டுள்ளது. இத்திருத்திய வடிவமைப்பினால் 1,24,988 சதுர அடி 2.87 acres ) நிலம் மட்டுமே நில எடுப்பின் மூலம் தேவைப்படுவதாகவும் இதனால் அரசுக்கு திட்ட மதிப்பீட்டில் அதிக சேமிப்பும் கிடைக்கும் என கூறப்பட்டுள்ளது.

தற்போது கட்டப்படவுள்ள மேம்பாலம் எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் சென்னை பக்கம் நான்கு வழி சாலையாகவும், 7.5 மீட்டர் அகலத்திற்கு சர்வீஸ் சாலையும், 2 மீட்டர் அகலத்திற்கு மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதையும் அமையவுள்ளது. கொல்கத்தா பக்கம் மேம்பாலத்தின் ஒரு கரம் தற்போதுள்ள எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் (NH5) சென்னையிலிருந்து மூலக்கடை செல்லும் போக்குவரத்து மட்டும் அனுமதிக்க இரண்டு வழி சாலையாகவும், 5.5 மீட்டர் அகலத்திற்கு சர்வீஸ் சாலையும், 1.5 மீட்டர் அகலத்திற்கு கால்வாய் மற்றும் நடைபாதை அமையவுள்ளது. இம்மேம்பாலத்தின் மற்றொரு கரம் மூலக்கடையிலிருந்து சென்னைக்கு வரும் போக்குவரத்திற்கு மட்டும் பயன்படும் வழியில் சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலையில் அமையவுள்ளது. சத்தியமூர்த்தி பிரதான சாலையில் 346 மீட்டர் நீளத்திற்கு அமையவுள்ள மேம்பாலம் இரண்டு வழி சாலையாகவும் 5.5 மீட்டர் அகலத்திற்கு சர்வீஸ் சாலையும், 1.5 மீட்டர் அகலத்திற்கு கால்வாய் மற்றும் நடைபாதை அமையவுள்ளது. மேற்கூறிய சத்தியமூர்த்தி பிரதான சாலை மேம்பாலத்தை உபயோகிக்க மூலக்கடையிலிருந்து வரும் வாகனங்கள் சென்னைக்கு வர எம்.கே.பி. நகர் மேற்கு நிழற்சாலை, வார்டு -35 மத்திய நிழற்சாலை வார்டு -33 மற்றும் சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலை வார்டு -32 வழியாக முறையே 487மீ, 708மீ (ம) 969மீ நீளத்திற்கு சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சாலைகளைப் பயன்படுத்தி போக்குவரத்து மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பே.சா.து.ந.க.எண்.பி4/1261/2009**

மேற்கூறிய மாற்று திட்டத்தை **9.3.09** அன்று நடந்த மூன்றாவது வழிகாட்டும் குழு கூட்டத்தில் விவாதித்து அதிக நில எடுப்பு குறைந்துள்ளதாலும் இதனால் திட்ட மதிப்பீடு குறைவதாலும், மேலும் பொது மக்களுக்கு அதிக சிரமம் இல்லாமலும் உள்ளதால் இத்திருத்திய வடிவமைப்பை ஏற்றுக்கொண்டுள்ளது.

இத்திட்டத்தை நெடுஞ்சாலை துறை நிறைவேற்ற சென்னை மாநகராட்சி சாலையான சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலையில் புதியதாக அமையவுள்ள மேம்பாலத்தின் ஒரு கரம் இரண்டு வழி சாலையாக அமைப்பதற்கும் மற்றும் மூலக்கடையிலிருந்து வரும் வாகன போக்குவரத்தை சென்னை மாநகராட்சி சாலைகளான எம்.கே.பி. நகர் மேற்கு நிழற்சாலை, மத்திய நிழற்சாலை மற்றும் சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலை வழியாக திருப்பி விடவும் சென்னை மாநகராட்சியின் இசைவு, (Concurrence) வேண்டி கேட்கப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் புதியதாக கட்டப்படவுள்ள மேம்பாலம் முழுமையாக நெடுஞ்சாலை துறை பராமரிப்பில் செயல்படும் என்றும், மாநகராட்சி சாலையான சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலையின் மேம்பால இருபக்க சர்வீஸ் சாலைகள் மற்றும் அணுகு சாலைகள் அனைத்தும் நெடுஞ்சாலை துறையினரால் மேற்கொள்ளப்பட்டு மேற்கூறிய மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டவுடன் சென்னை மாநகராட்சிக்கு பிற்கால பராமரிப்பிற்கு ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மூன்றாவது வார்டு குழுவின் பரிந்துரை தீர்மான எண். **236**, நாள் **08.07.2009**.ன்படி பெறப்பட்டுள்ளது.

எனவே, நெடுஞ்சாலை துறை கேட்டுக்கொண்டுள்ளபடி சத்தியமூர்த்தி பிரதான சாலையில் புதியதாக கட்டப்படவுள்ள எருக்கஞ்சேரி மேம்பாலத்தின் ஒரு கரத்தினை அமைத்துக்கொள்வதற்கும் மேலும் மூலக்கடையிலிருந்து சென்னைக்கு வரும் வாகன போக்குவரத்திற்கு சென்னை மாநகராட்சி சாலைகளான எம்.கே.பி. நகர் மேற்கு நிழற்சாலை, வார்டு -35, மத்திய நிழற்சாலை வார்டு -33, மற்றும் சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலை வார்டு -32, ஆகிய சாலைகளை உபயோகித்து கொள்வதற்கும் இசைவு (Concurrence) அளிக்க நிலைக்குழு பணிகள் மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி மூலமாக) மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “**13.7.2009** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். **73/2009**, நாள்: **13.7.2009**–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

> “**16.7.2009** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.**86/2009** நாள்: 16.7.2009ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :241/2009 பொருள் எண் : 41

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

வார்டு எண் : 14 மண்டலம் : 2

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | kz;lyk;-2,thh;L-14y;, தண்டையார்பேட்டை, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தொற்று நோய் மருத்துவமனையை நவீன வசதிகளுடன் மேம்படுத்தும் பணி |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை/ மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை | தோராய திட்ட மதிப்பீடு ரூ.1230.00 இலட்சங்கள் மற்றும் விவர திட்ட மதிப்பீடு ரூ.1323.00 இலட்சங்கள் |
| மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்ட விவரம் | மன்றத் தீர்மான எண்.693/2008 நாள்.30.12.2008 மற்றும் அரசாணை எண்.114, நாள்.06.07.2009 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. |
| விலைப்பட்டி ஆண்டு | 2008–09 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| வ. எண். | ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை | 2008–2009ஆம் ஆண்டின் விலைவிகித விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1. | ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ | ரூ.11,04,88,944.28 | ரூ.14,26,09,270.00 | (+) 29.07 % அதிகம் |
| 2. | ஸ்வரூபா இன்ஜினியரிங் கன்ஷ்டரக்சன்ஸ் கம்பெனி பிரைவேட் லிமிடெட் | ரூ.11,04,88,944.28 | ரூ.13,81,57,760.00 | (+) 25.04 % அதிகம் |
| 3. | பி.இ.பில்லிமோரியா அண்டு கம்பெனி லிமிடெட் | ரூ.11,04,88,944.28 | ரூ.17,62,00,673.80 | (+) 59.47 % அதிகம் |
| 4. | சிவா இன்ஜினியரிங் கம்பெனி | ரூ.11,04,88,944.28 | ரூ.13,10,49,420.00 | (+) 18.61 % அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விவரங்கள் | 09.07.2009 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்ப விவரம் | **ரூ13,08,99,420.00** |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திருவாளர்கள் சிவா இன்ஜினியரிங் கம்பெனி |
| இறுதி ஒப்பந்தத்தொகை ரூபாய் | **ரூ13,08,99,420.00** |
| இறுதி ஒப்ப சதவிகிதம் | **(+)18.47% அதிகம்** |
| விலைப்பட்டி ஆண்டு | 2008–2009 |

மேற்கண்ட திட்ட பணிக்கு பொதுப்பணித்துறையின் 2008–09 ஆம் ஆண்டின் கட்டட பரப்பளவின் விலைவிகிதப்படி தோராய திட்ட மதிப்பீடு ரூ.1230.00 இலட்சங்களுக்கும் மற்றும் சுகாதார அலுவலர் அவர்களின் குறிப்பின்படி மருத்துவமனைக்கு தேவைப்படும் தளவாடங்கள் கொள்முதல் செய்யவும் உள்கட்டமைப்பு வசதிக்காக ரூ.123.25 இலட்சங்கள் ஆக மொத்தம் ரூ.1353.25 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி தீர்மான எண்.693/2008 நாள்.30.12.2008ல் பெறப்பட்டு அரசின் நிர்வாக அனுமதி வேண்டி அரசிற்கு அனுப்பப்பட்டது. இதற்கிடையில் தமிழ் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டடு இதனால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்யும் நிதியின் கீழ் மேற்கண்ட திட்ட பணிக்கு

ரூ.8.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை எண்.262, நாள்24.12.2008 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் அரசாணை வழங்கியுள்ளது.



**க.து.ந.க.எண்.பி2/3350/2007**

மேற்கண்ட பணியின் அவசரம் மற்றும் அவசியத்தை கருதி, அரசின் நிர்வாக அனுமதியை எதிர் நோக்கி 2008-09 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி விவர திட்ட மதிப்பீடு ரூ.1323.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டன. முதல் முறையில் ஒப்ப இறுதி நாளான 03.04.2009 ஒப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. இரண்டாம் முறையில் ஒப்ப இறுதி நாளான 26.06.2009 அன்று நான்கு ஒப்பங்கள் பெறப்பட்டு அன்றே தொழில் நுட்ப ஒப்பங்கள் (Technical Bids) திறக்கப்பட்டன. நான்கு ஒப்பந்ததாரர்களும் ஒப்ப முன் தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் அவர்களின் ஒப்பந்த விலைப் புள்ளிகள் (Price Bids) 08.07.2009 அன்று திறக்கப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.சிவா இன்ஜினியரிங் கம்பெனி அவர்களின் ஒப்பத் தொகை ரூ.13,10,49,420.00 ஆகும். இது 2008-09 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.11,04,88,944.28யை விட (+) 18.61% அதிகமாகும். 09.07.2009 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப்பின் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். சிவா இன்ஜினியரிங் கம்பெனி அவர்களின் இறுதி ஒப்பத் தொகை ரூ.13,08,99,420.00 ஆகும் மற்றும் 2008-09 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.11,04,88,944.28யை விட (+) 18.47% அதிகமாகும். மேலும் நடப்பு சந்தை விலைகளுடன் (The Hindu Property Plus dated.20.06.2009 & 27.06.2009) ஒப்பிடுகையில் இவரது ஒப்ப விழுக்காடு (+) 2.31% அதிகமாகும்.

மேற்கண்ட பணிக்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். சிவா இன்ஜினியரிங் கம்பெனி அவர்களின் குறைந்த ஒப்பம் 10.07.2009 அன்று நடைபெற்ற ஒப்பக்குழு (Tender Committee) முன் சமர்ப்பிக்கப்பட்டு இவ்வொப்பம் ஏற்க பரிந்துரை பெறப்பட்டுள்ளது

தற்போது 2008–09 ஆம் ஆண்டின் பொதுப்பணித்துறையின் கட்டட பரப்பளவு விலை விகிதப்படி தயாரிக்கப்பட்ட தோராய திட்ட மதிப்பீடு ரூ.1230.00 இலட்சங்கள் மற்றும் மருத்துவமனைக்கு தேவைப்படும் தளவாடங்கள் கொள்முதல் செய்யவும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிக்காக ரூ.123.25 இலட்சங்கள் ஆக மொத்தம் திட்ட மதிப்பீடு ரூ.1353.25 இலட்சங்களுக்கு அரசாணை எண்.114, நாள்.06.07.2009 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், 2008–09 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள விவர திட்ட மதிப்பீடு ரூ.1323.00 இலட்சங்கள் மற்றும் மருத்துவமனைக்கு தேவைப்படும் தளவாடங்கள் கொள்முதல் செய்யவும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிக்காக ரூ.123.25 இலட்சங்கள் ஆக மொத்தம் திட்ட மதிப்பீடு ரூ.1446.25 இலட்சங்களுக்கு அரசின் .திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது.

எனவே,

1. மேற்கண்ட திட்ட பணிக்கு அரசின் நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி 2008–2009 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி விவர திட்ட மதிப்பீடு ரூ.1323.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு ஒப்பங்கள் கோரியமைக்கு பின்னேற்பு அனுமதியும்,

2. மேற்கண்ட திட்ட பணிக்கு 2008–2009 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள விவர திட்ட மதிப்பீடு ரூ.1323.00 இலட்சங்களுக்கும் மற்றும் மருத்துவமனைக்கு தேவைப்படும் தளவாடங்கள் கொள்முதல் செய்யவும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிக்காக ரூ.123.25 இலட்சங்கள் ஆக மொத்தம் மதிப்பீடு ரூ.1446.25 இலட்சங்களுக்கு அரசின் திருத்திய நிர்வாக அனுமதி பெற அனுமதியும்,

3. பேச்சுவார்த்தைக்குப்பின் குறைந்த ஒப்பந்ததாரர் . திருவாளர்கள். சிவா இன்ஜினியரிங் கம்பெனி அவர்களின் <u>ரூ.13,08,99,420.00</u> (ரூபாய் பதிமூன்று கோடியே எட்டு இலட்சத்து தொன்னூற்று ஒன்பதாயிரத்து நானுற்று இருபது மட்டும்) க்கான அதாவது 2008–2009 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+)18.47% அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை அவர்களுக்கு சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி 80(2)ன் படி நிலைக்குழு (பணிகள்), மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)ன் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"13.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 71/2009 , நாள்: 13.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.88/2009 நாள்: 16.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.பி5/2923/2008**

**ஆணையர் அவர்களின் 11.07.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :242/2009 பொருள் எண்.42

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

வார்டு எண் : 68 மண்டலம் : 5

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | மண்டலம் –5, வார்டு – 68ல், புல்லா அவன்யூ செனாய் நகரில் ஏற்கனவே உள்ள குழந்தைகள் நல மையத்தில் (24X7 EOC) கூடுதலாக புறநோயாளி பிரிவு கட்டடம் மற்றும் உள்நோயாளி பிரிவிற்கு ரேம்ப் (Ramp), மின் தூக்கி வசதியுடன் கூடிய மின் தூக்கி அறை மற்றும் அபிவிருத்தி பணி |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை/ மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை | ரூ.124.00 இலட்சங்கள் |
| மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்ட விவரம் | மன்றத் தீர்மான எண்.603/2008 நாள்.30.12.2008 |
| விலைப்பட்டி ஆண்டு | 2008–09ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| . எண். | ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை | 2008–2009 ஆம் ஆண்டின் விலைவிகித விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1. | திரு.ஜி.சி.பாஸ்கரன் | ரூ.1,05,26,579.04 | ரூ.1,55,79,336.98 | (+) 48.00 % அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விவரங்கள் | 18.06.2009 மற்றும் 25.06.2009 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்ப விவரம் | **ரூ1,19,79,246.95** |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திரு.ஜி.சி.பாஸ்கரன் |
| இறுதி ஒப்பந்தத் தொகை ரூபாய் | **ரூ1,19,79,246.95** |
| இறுதி ஒப்ப சதவிகிதம் | **(+) 13.80 % அதிகம்** |
| விலைப்பட்டி ஆண்டு | 2008–2009 |

மேற்கண்ட பணிக்காக மறு ஒப்பங்கள் கோரப்பட்டு நான்காம் முறையில் பெறப்பட்ட ஒப்பந்ததாரர் .திரு.ஜி.சி.பாஸ்கரன் அவர்களின் ஒற்றை ஒப்பம் 10.07.2009 அன்று நடைபெற்ற ஒப்பக்குழு (Tender Committee) முன் சமர்ப்பிக்கப்பட்டு இவ்வொப்பம் ஏற்க பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

**<u>க.து.ந.க.எண்.பி5/2923/2008</u>**

எனவே, பேச்சுவார்த்தைக்குப்பின் ஒற்றை ஒப்பந்ததாரர் .திரு.ஜி.சி.பாஸ்கரன் அவர்களின் **ரூ.1,19,79,246.95** (ரூபாய் ஒரு கோடியே பத்தொன்பது இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து இரு நூற்று நாற்பத்து ஆறு மற்றும் பைசா தொன்னூற்று ஐந்து மட்டும்) க்கான அதாவது **2008–2009** ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+)13.80% அதிகமான ஒற்றை ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை அவர்களுக்கு அளிக்க செனனை மாநகர முனிசிபல் சட்டம் விதி **1919**ல் விதி **80(2)**ன் படி நிலைக்குழு (பணிகள்), மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)ன் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"**13.7.2009** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 72/2009 , நாள்: 13.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"**16.7.2009** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.**87/2009** நாள்: 16.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பா.து.ந.க.எண்.பி3/875/96

ஆணையர் அவர்களின் 19.06.2009 நாளிட்ட குறிப்பு

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :243/2009 பொருள் எண்.43

**பெரம்பூர் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு கோட்டம்-37ல் உள்ள டேங்க் பண்ட் சாலையில் கூடுதல் நிலங்கள் கையகப்படுத்த வேண்டி மாவட்ட ஆட்சியர் மூலம் அரசின் அனுமதி கோர மன்றத்தின் அனுமதி கோரல்**

மண்டலம் -3, கோட்டம்-37 மற்றும் 38ல் பெரம்பூர் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

கோட்டம் 37ல் உள்ள டேங்க் பண்ட் சாலையில், சாலை விரிவாக்கத்திற்காக பழைய வடிவமைப்பின்படி இரு வாகனப்பாதை அமைக்க 653 ச.மீ. தனியார் நிலங்கள் கையகப்படுத்த சென்னை மாவட்ட ஆட்சியர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழகம் அளித்துள்ள புதிய வடிவமைப்பின்படி, டேங்க் பண்ட் சாலையில் அதிகளவில் வாகனங்கள் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, டேங்க் பண்ட் சாலையை நான்கு வாகனப்பாதையாக விரிவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு கூடுதல் நிலங்கள் கையகப்படுத்த வேண்டியுள்ளது. இந்நிலங்கள் சிறுவள்ளூர் கிராமம், பகுதி எண்.14, புல எண்.5,6 மற்றும் 7ல் சுமார் 161 ச.மீ. மற்றும் பெரம்பூர் கிராமம் புல எண்.358 பகுதியில் சுமார் 14 ச.மீ. பரப்பளவு கொண்ட தனியார் நிலங்கள் ஆகும்.

எனவே, மேற்கண்ட கூடுதல் தனியார் நிலங்களை கையகப்படுத்த, சென்னை மாவட்ட ஆட்சியர் மூலமாக அரசின் அனுமதி கோர, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “13.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 70/2009 , நாள்: 13.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> “16.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.89/2009 நாள்: 16.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பா.து.ந.க.எண்.பி3/875/96.
ஆணையர் அவர்களின் 10.06.2009 நாளிட்ட குறிப்பு

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :244/2009 பொருள் எண்.44

**பெரம்பூர் மேம்பாலத்தையொட்டி வடக்கு மற்றும் தெற்கு பக்கங்களில் உள்ள காலியிடத்தில் பூங்காக்கள் அமைத்தல் – வடக்கு பக்கமுள்ள அரசுக்கு சொந்தமான நிலத்தை சென்னை மாநகராட்சிக்கு நிலமாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரல்**

அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை அவர்கள் 15.4.2009 அன்று கோட்டம்–37, மண்டலம்–4ல் உள்ள பெரம்பூர் மேம்பாலம் கட்டுமானப்பணியை பார்வையிட்டதை தொடர்ந்து, 12.05.2009 அன்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் பெரம்பூர் மேம்பாலத்தையொட்டி வடக்கு மற்றும் தெற்கு பக்கங்களில் உள்ள காலியிடத்தில் பூங்காக்கள் அமைக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

பெரம்பூர் சுரங்கப்பாதையின் தெற்கு பக்கமுள்ள நிலம் தென்னக இரயில்வேயிடமிருந்து சென்னை மாநகராட்சியால் வாங்கப்பட்ட நிலம் ஆகும்.

பெரம்பூர் சுரங்கப்பாதையின் வடக்கு பக்கமுள்ள நிலம் அரசுக்கு சொந்தமான நிலம் ஆகும். இந்த நிலத்தின் புல எண்.356/1, 356/3 மற்றும் 356/13 பெரம்பூர் கிராமம் இதன் மொத்தம் பரப்பளவு 79 மனை ஆகும். இதில், ஏற்கனவே சுமார் 9 மனையை சென்னை மாநகராட்சி நிலமாற்றம் செய்திட கேட்டுக் கொண்டதற்கிணங்க சென்னை மாவட்ட ஆட்சியரால் சென்னை மாநகராட்சிக்கு முன்நுழைவு அனுமதி அளித்து உள்ளது.

எனவே, தற்போது மீதிமுள்ள சுமார் 70 மனையை சென்னை மாநகராட்சிக்கு நில மாற்றிடம் செய்திட அரசை கேட்டுக்கொள்ள நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“13.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 69/2009 , நாள்: 13.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“16.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.90/2009 நாள்: 16.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**நிமஉது நக எண்.எல்இ4/2833/01**

**ஆணையர் அவர்களின் 19.6.2009 நாளிட்ட குறிப்பு**

## 22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :245/2009 பொருள் எண்:45

### சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டிடம் கட்ட இட ஒதுக்கீடு

மாவட்ட ஆட்சியரின் 4.12.2006 நாளிட்ட கடிதத்தில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டிடம் கட்ட சென்னை மாவட்டம், மயிலை–திருவல்லிக்கேணி வட்டம், மயிலாப்பூர் கிராமம், பிளாக் எண்.87, ட்டி.எஸ்.எண். 3, ஆர்.எஸ்.எண்.3959/7–ல் உள்ள 2000 சதுர அடி சென்னை மாநகராட்சி தனி நிலத்தில் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் இசைவு அளித்துள்ளதாகவும், மேற்படி புலத்தில் எம்.ஜி.ஆர். மதிய உணவுத்திட்டம் மைய எண்.1016 நடைபெற்றுவருவதாகவும்,மேற்படி நிலம் சென்னை மாநகராட்சியின் அனுபவத்திலுள்ளதால், இந்நிலத்தில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினருக்கான அலுவலகக் கட்டிடம் கட்ட சென்னை மாநகராட்சியின் மாமன்ற தீர்மானத்தினை பெற்று அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மேற்படி இடத்தை மாவட்ட வருவாய் அலுவலர் 7.5.2007 அன்று ஆய்வு செய்ததில், சத்துணவுக்கூடம் அருகில் உள்ள புதிய கட்டிடத்தில் இயங்கி வருவதாகவும், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்ட கோரும் இடத்தில் பயனற்ற பழைய கட்டிடம் மட்டுமே உள்ளதாகவும் அறியப்பட்டது.

மேற்கண்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் கட்டிடம் கட்ட தேர்வு செய்துள்ள மேற்படி இடத்தில் தொகுதி அலுவலகம் கட்ட இட ஒதுக்கீடு செய்வது குறித்து அறிக்கை அளிக்குமாறு மண்டல அலுவலர்–10 அவர்களை கோரப்பட்டது.

மேலும் நிலத்தில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் கட்டிடம் கட்ட நில ஒதுக்கீடு சம்பந்தமாக கோரிக்கை விடுத்துள்ளதாகவும், மேலும் இதனை சட்டமன்ற அவைக்குழு 25.4.2007 அன்று பரிசீலனை செய்து சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் கட்ட உடனடியாக பணியினை தொடங்க அறிவுறுத்தியுள்ளதால், இந்நிலத்திற்கு ஒரு விழுக்காடு தொகையினை வருட வாடகையாக பொதுப்பணித்துறை செலுத்தவேண்டும் என்ற நிபந்தனை விதித்து பொதுப்பணித்துறை முன்னுழைவு செய்து உடனடியாக பணியினை தொடங்க முன்னுழைவு அனுமதி வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பித்திட வார்டு . குழுவின் பரிந்துரையினை விரைவில் பெற்று அனுப்பிவைக்குமாறு 10–வது மண்டல அலுவலரை,11.5.2007 நாளிட்ட குறிப்பு மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

14.5.2007 நாளிட்ட 442/2007 எண்ணிட்ட 10 வது மண்டல வார்டு குழு தீர்மானத்தில் மைலாப்பூர் சட்ட மன்ற அலுவலகம் கட்டிடம் கட்டுவதற்கு மேற்படி இடத்தினை வழங்க இயலாது என்று நிராகரிக்கப்பட்டது. மேற்கண்ட சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் கட்டிடம் கட்ட நில ஒதுக்கீடு செய்து முன்னுழைவு அனுமதி வழங்குவது குறித்து 10 வது வார்டு குழுவால் நிராகரிக்கப்பட்ட முடிவினை மறு பரிசீலனை செய்து முன்னுழைவு அனுமதி வழங்கிட மன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்பட்டது. இதற்கு மன்றம் 28.5.2007 நாளிட்ட 272/2007 எண்ணிட்ட மன்றத்தீர்மானத்தில் இப்பொருள் ஒத்தி வைக்கப்படுகிறது. என்று முடிவெடுத்துள்ளது.

தற்போது மைலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் கட்டுவதற்கு மேற்படி நிலத்தினை இட ஒதுக்கீடு செய்ய 17.4.2008 நாளிட்ட 298/2008 எண்ணிட்ட 10 வது மண்டல வார்டு குழு தீர்மானத்தில் இப்பொருள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

29.5.2008 நாளிட்ட தலைமைப்பொறியாளர் (க) பொதுப்பணித்துறை அவர்களின் கடிதத்தில் மைலாப்பூர் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் கட்டிடம் கட்டுவதற்கு பணி தளம் மாநகராட்சி மன்றத்தீர்மானத்தில் முடிவு செய்து பொது பணித்துறை வசம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே 10வது மண்டல வார்டுகுழு தீர்மான எண்.298/09, நாள்.17.04.2008ல் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டிடம் கட்ட ஒதுக்கீடு செய்யப்படும் நிலத்தின் புல எண் விவரம்.3959/7 என்பதற்கு பதிலாக 3959 என குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விவரம் வார்டுகுழுவின் தகவலுக்கு கொண்டுச் செல்லப்பட்டு இந்நிலத்தின் சரியான புல எண் விவரத்தினை அதாவது 3959/7 என குறிப்பிடப்பட்டு திருத்திய வார்டுகுழு தீர்மான எண்.177, நாள்.26.05.2009 மீண்டும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**நிமஉது நக எண்.எல்இ4/2833/01**

எனவே மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடம் கட்ட இட ஒதுக்கீடு செய்வது குறித்து 272/2007 எண்ணிட்ட மன்றத் தீர்மானத்தில் ஒத்திவைக்கப்பட்ட முடிவினை மறுபரிசீலனை செய்து தற்போது பரிந்துரைசெய்யப்பட்டுள்ள மேற்படி வார்டுகுழு தீர்மானத்தின்படி மயிலாப்பூர் கிராமம், பிளாக் எண். 87, டி.எஸ்.எண்.3, ஆர்.எஸ். எண்.3959/7ல் உள்ள 2000 சதுர அடி சென்னை மாநகராட்சி (தனி) நிலத்தினை பொதுப் பணித்துறை இந்நிலத்திற்கு சந்தை விலை மதிப்பில் ஒரு விழுக்காடு தொகையினை வருட வாடகையாக செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதித்து, பணியினை ஆரம்பிக்க, இந்நிலத்தில் முன்நுழைவு அனுமதி வழங்குவது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.7.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.91/2009 நாள்: 16.7.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:நிமஉது.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.சி1/4380/2008
ஆணையாளர் அவர்களின் 23.06.2009 நாளிட்ட குறிப்பு

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :246/2009 பொருள் எண்.46

**பணிதுறப்பு அனுமதி வேண்டுதல்**

டாக்டர் சி.ஆர்.வி. நரசிம்மலு, மருத்துவ அலுவலர், புதுப்பாக்கம் மருந்தகம் மண்டலம்–6, என்பவர் 21.07.2008 நாளிட்ட அவரது கடிதத்தில் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக 21.07.2008 முதல் தனது மருத்துவ அலுவலர் பதவியினை பணி துறப்பு (Resignation) செய்வதாக தெரிவித்துள்ளார்.

தனியர் 11.02.2008 முதல் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டார். இவரது பணி நியமனம் குறித்து அரசின் உறுதியாக்கம் வேண்டி அரசிற்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் தனியர் தனது மருத்துவ அலுவலர் பதவியினை பணி துறப்பு செய்துள்ளார். தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநர் அவர்களின் 12.05.2009 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார்.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சியில் வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியர் பணி துறப்பு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே, டாக்டர் சி.ஆர்.வி. நரசிம்மலு, மருத்துவ அலுவலர் புதுப்பாக்கம் மருந்தகம் மண்டலம்–6 என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக 21.07.2008 முதல் தனது மருத்துவ அலுவலர் பதவியினை பணி துறப்பு செய்துள்ளதால் இவரது கோரிக்கையினை பொது விதி 41ன் கீழ் ஏற்றுக்கொள்ளலாம் இவரை 21.07.2008 முதல் பணி துறப்பில் சென்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஜி4/52261–A/07**
**ஆணையரின் 30.05.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :247/2009 பொருள் எண்.47

**பணியமைப்பில் நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதி வேண்டுதல்**

சென்னை மாநகராட்சி பகுதிகளில் தற்போது பெருகி வரும் மக்கள் தொகை, உள்ளமைப்பு கட்டுமானங்கள் அதற்கேற்ப மாநகராட்சியின் பல்வேறு இன்றியமையா சேவைகளை (களப்பணிகளான சுகாதாரப்பணி, சாலைப்பணி, தெரு விளக்கு பராமரித்தல், துப்புரவு பணி, வரி மதிப்பீடு, சொத்து வரி, தொழில் வரி மற்றும் இதர வரி வசூலிப்பது மற்றும் பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் முக்கிய கட்டுமானங்கள் / பராமரிப்பு பணிகள்) பொது மக்களுக்கு அன்றாடம் சீரிய முறையில் சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வகையான பணிகளை தற்போதுள்ள சூழ்நிலைக்கேற்ப சென்னை மாநகராட்சியின் மூல பணியமைப்பில் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சியில் பல பணிகள் முடிவுற்று பராமரிப்பு பணி மட்டும் மண்டல அலுவலகத்தினர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதால் சில துறைகளின் முக்கியத்துவம் தேவை குறித்து பரிசீலிக்கப்பட வேண்டிய நிலை உள்ளதாலும், சில துறைகளில் அலுவலர்கள் / பணியாளர்களின் எண்ணிக்கை குறித்து முடிவெடுக்கவும் வேண்டியுள்ளது. இது குறித்து பல ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு துறை தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்களின் ஆலோசனையுடன் கருத்துரையும் வரப்பெற்றது.

இதனைத்தொடர்ந்து சென்னை மாநகராட்சி பணியமைப்பின் கீழ் வரும் வகுப்பு 1பி, 2, 3 மற்றும் 4ம் நிலை முறையே அலுவலர்கள் மற்றும் பணியாளர்களிடையே தற்போதுள்ள காலம் / சூழ்நிலைக்கேற்ப நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சியின் பல்வேறு துறைகளில் காலத்திற்கேற்ப மாற்றங்கள் நிகழ்ந்து பல பதவிகளின் முக்கியத்துவம் குறைந்ததால் நீண்ட காலமாக அப்பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளது. இவ்வகையான பதவிகளை சீர்திருத்தம் செய்து தற்போதுள்ள நிர்வாகத்திற்கு ஏதுவாக அமைக்க முடிவெடுக்க வேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சியில் கடந்த காலக்கட்டங்களில் பொறியியல் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் சென்னை மாநகராட்சி பணியாளர்களைக்கொண்டு செய்முறைப்படுத்தப்பட்டு வந்தது. பின்பு இவ்வகையான பணிகள் யாவும் ஒப்பந்தங்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதே போல் சென்னை மாநகராட்சியில் பல பணிகள் முடிவுற்று பராமரிப்பு பணி மட்டும் மண்டல அலுவலகத்தினர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதால் சில துறைகளின் முக்கியத்துவம் தேவை குறித்து பரிசீலிக்க வேண்டும். இவ்வகையான மாற்றங்கள் நடைமுறையில் உள்ளதால் அதற்கேற்ப பணியாளர்களின் எண்ணிகை / அமைச்சு பணியாளர்கள் மற்றும் பொறியியல் பிரிவின் பொறியாளர்களை நிர்ணயிக்க வேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பின் கீழ் வரும் வகுப்பு 1பி, 2, 3 மற்றும் 4ம் நிலை முறையே அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் எண்ணிக்கை மற்றும் பதவி தேவை குறித்து பரிசீலிக்கப்பட்டும், திருத்தியமைக்கப்பட்டும், துறை மற்றும் மண்டலம் வாரியாக அட்டவணையிடப்பட்டுள்ளது.

அட்டவணையில்,

1. கலம்–1ல் குறிப்பிட்டுள்ள துறை / மண்டல வாரியாக உள்ள எண்ணிக்கை மற்றும் பதவிகள் தற்போது அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையாகும்,

2. கலம்–2ல் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கை சீர்திருத்தம் செய்யப்பட்ட பின்பு தற்போது நிர்வாகத்திற்கு தேவைப்படும் எண்ணிக்கையாகும்,

3. கலம்–3ல் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கை தற்போது நிர்வாகத்தில் உள்ள எண்ணிக்கையாகும்,

4. கலம்–4ல் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கை சீர்திருத்தம் செய்யப்பட்டு நிர்வாகத்திற்கு தேவையில்லா பதவிகளாக கருதி இதனை ஒப்புவிக்கும் பதவி / எண்ணிக்கையாகும்,

5. கலம்–5ல் குறிப்பிட்டுள்ளபடி காலத்திற்கேற்ப நிர்வாகத்திற்கு தேவைப்படும் அத்தியாவசிய மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த புதியதாக தோற்றுவிக்கப்படவுள்ள பதவிகளின் விவரம் பின்வருமாறு :

**பொ.து.ந.க.எண்.ஜி4/52261–A/07**

| | | | |
|---|---|---|---|
| (i) | Asst. Residential Officer | - | 1 |
| (ii) | Auto Electrician | - | 1 |
| (iii) | Data Entry Operator (CDH) | - | 1 |
| (iv) | Deputy Collector | - | 1 |
| (v) | Doctors for EOC Specialist in Anaesthesiology, Paediatrics,OG | - | 30 |
| (vi) | Electrician & Plumbing Assistants (skilled Labours) | - | 5 |
| (vii) | Health Educator | - | 2 |
| (viii) | IT Manager | - | 1 |
| (ix) | Librarian (CDH) | - | 1 |
| (x) | Public Health Nurse | - | 1 |

இப்பதவிகளை புதியதாகவும் தோற்றுவிக்கவும் கொள்கை ரீதியாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(அ) சென்னை மாநகராட்சி ஓட்டுநர்களின் பணியமைப்பு சம்பந்தமான அனைத்து நிகழ்வுகளும் நிர்வாக வசதிக்காக தாய் துறையான இயந்திர பொறியியல் துறைக்கு மாற்றியமைக்கலாம்.

(ஆ) பொது தொழிற்சாலை மற்றும் அரங்க அலுவலகத்தில் பணிகள் ஏதும் நடைபெறாததால் அத்துறைகளை முடிவுற்றல் (winding up) செய்யலாம், தற்போதுள்ள பணியாளர்களை அவரவர் வயது முதிர்வு ஓய்வு பெறும் வரை பணியில் தக்க வைத்துக்கொண்டு மண்டல அளவில் ஊதியம் வழங்கலாம்.

சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919, துணை விதி 90ன்படி இறுதி செய்யப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்டு சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ள பதவிகளை சென்னை மாநகராட்சி பணியமைப்பில் தக்க வைத்துக்கொண்டும், நிர்வாகத்திற்கு தேவையில்லா பதவிகளை ஒப்புவித்தும், முக்கியத்துவம் வாய்ந்த பதவிகளை தோற்றுவிக்கவும், புதிய பணிகள் ஏதும் ஏழாததால் பொது தொழிற்சாலை மற்றும் அரங்க அலுவலகத்தில் பணிகள் ஏதும் நடைபெறாததால் அத்துறைகளை முடிவுற்றல் (winding up) செய்தும், தற்போதுள்ள பணியாளர்களை அவரவர் வயது முதிர்வு ஓய்வு பெறும் வரை பணியில் தக்க வைத்துக்கொண்டு மண்டல அளவில் ஊதியம் வழங்கி பின்பு அப்பதவிகளை நீக்கம் செய்யவும் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"18.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மானஎண்.61/09 நாள்.18.6.2009–ன்படி பணியாளர்களின் கல்வித் தகுதி, அனுபவம் மற்றும் அவர்களது பதவி உயர்வுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமலும் மனவருத்தம் இல்லாமலும் நிர்வாகத்தை சீர்திருத்தம் செய்யவும் என்ற கருத்தின் அடிப்படையில் நிலைக்குழு(வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது "

"இப்பொருள் நியமனக்குழுவில் விரிவாக விவாதிக்கப்பட்டு, ஒப்புவிப்பு பதவிகளில் பிரிவு மேலாளர் பணியிடங்களை தவிர்த்து என்ற திருத்தத்துடன் இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"அனைத்து கட்சி தலைவர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட அனைத்து தொழிற் சங்க தலைவர்களின் கூட்டங்களை கூட்டி கலந்து ஆலோசித்து அடுத்து வரும் மன்றக் கூட்டத்தில் சமர்ப்பிக்கலாம் என்ற கருத்தின் அடிப்படையில் இப்பொருள் தள்ளிவைக்கப்படுகிறது".

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்